செ.வெ. எண்: 803 நாள்: 30.12.2011

# பத்திரிகை செய்தி

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சென்னை, “ **நீங்களும் தொழில் தொடங்கலாம்**” என்ற தலைப்பில் தொழில் முனைவோர்க்கான ஒரு மாத பயிற்சியினை பிப்ரவரி மற்றும் மார்ச் 2012 மாதங்களில் பல்வேறு மாவட்டங்களில் நடத்த திட்டமிட்டுள்ளது.

இப்பயிற்சியில் முதல் தலைமுறை தொழில் முனைவோர்க்கு சரியான தொழிலை தேர்ந்தெடுத்தல், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் அதற்கான நிதி ஆதாரத்திற்கு ஆலோசனை வழங்கப்படும்.

இந்த பயிற்சி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினை சார்ந்த வேலையில்லா பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற இளைஞர்களுக்கு மட்டும் தான். தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் பிரபல கல்லூரிகளில் இப்பயிற்சியை அளிக்க திட்டமிட்டுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து பயன் பெற விரும்பும் 18 முதல் 35 வயதிற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பட்டம் மற்றும் பட்டயத்தாரர்கள் தங்கள் பெயர், விலாசம், கைபேசி மற்றும் மின் அஞ்சல் உள்ளிட்ட விவரங்களோடு மேலாளர் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியம் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கோரப்படுகிறார்கள். விண்ணப்பம் பெற கடைசி நாள் 18.01.2012. விண்ணப்பத்துடன் கல்வி, சாதி மற்றும் வயதிற்கான சான்றுகளுடன் இரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் சமர்ப்பிக்க வேண்டும்.

பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி பெற்றவர்கள் கடனுதவி பெற அனைத்து உதவிகளும் செய்யப்படும். எனவே, மேற்கூறிய தகுதியுள்ளவர்கள் இந்த இலவச பயிற்சியினை பெற்று பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.